**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2015**

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 9/574 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன**

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தற்போது உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சாகவுள்ள முன்னாள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 09 வீதிப் பகுதிகளின் 138.39 கிலோமீற்றர்களை புனரமைத்து மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.
கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 81.75 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 60 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதனது செயற்பாடுகளை 2013 யூன் 03 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு

அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| அபிவிருத்திக்கான சவூதி நிதியம் | 60.00 | 7,800 | 3,805.00 | 21.77 | 2,944.61 | 37.10 | 4,937.70 |
| ஜீஓஎஸ்எல் | 21.75 | 2,828 | 72.39 | - | 56.22 | - | 176.50 |
| **மொத்தம்** | **81.75** | **10,628** | **3,877.39** | **21.77** | **3,000.83** | **37.10** | **5,114.20** |

மேற்படி தகவல்களிற்கமைய, செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 60 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 2015 திசெம்பர் 31 வரை ரூபா 61.83 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,937.70 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 37.10 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே எஞ்சியுள்ள ஐ.அ.டொ. 22.90 மில்லியன் ஒதுக்கீட்டினை மீதமாகவுள்ள 01 ஆண்டு காலத்தில் பயன்படுத்துவது மிகவும் சாத்தியமற்றதாகும் என்பதனை இது காட்டியது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், கடுககஸ்தோட்டை முதல் நாஉல வரைக்குமான கண்டி - யாழ்ப்பாண வீதியின் 03 பிரிவுகளிலுள்ள 50 கிலோமீற்றர்கள், பேலியகொட முதல் கிரிபத்கொட வரைக்குமான கொழும்பு - கண்டி வீதியின் 7.24 கிலோமீற்றர்கள் மற்றும் தம்பலகாமம் - கின்னியா வீதியின் 8.5 கிலோமீற்றர்கள் வீதிகளை புனரமைத்து மேம்படுத்தும் வேலைகள், செயற்திட்டத்தினால் பூரணப்படுத்தப்பட்டு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், தெஹிஓவிட – தெரணியகல நூரி வீதியின் 14 கிலோமீற்றர்களை புனரமைத்து மேம்படுத்தும் வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்படுவதற்கு இருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிஓவிட – தெரணியகல வீதியினை புனரமைத்து மேம்படுத்தும் வேலைகளின் விடயப்பரப்பில் உள்ளடங்கியிருக்காத தெரணியகல மாவட்ட வைத்தியசாலை, பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையத்தினை அண்மிக்கும் வீதிகளும் செயற்திட்டத்தினால் மேம்படுத்தப்பட்டிருந்தன. அதன் விளைவாக, 27 முரண் கட்டளைகளின் ஊடாக செயற்திட்டத்தினால் ரூபா 161.52 மில்லியன் தொகையான மேலதிகக் கிரயம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு ஆரம்ப கட்டத்தில் புனரமைத்தல் வேலைகளின் உரிய விபரமான வடிவமைத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பின் அதற்காக ஏற்பட்டிருந்த மேலதிகக் கிரயத்தினை குறைத்திருக்க முடியுமென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 யூலை 11 ஆந் திகதி கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் போது கண்டி – யாழ்ப்பாண வீதியின் கடுகஸ்தோட்டை முதல் அலவதுகொட வரைக்குமான 11 கிலோமீற்றர் வீதிப் பகுதியின் தளப்பரப்பில் கீழே விபரிக்கப்பட்டவாறு அநேக குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| **குறைபாட்டின் தன்மை** | **அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| வீதித் தளப்பரப்பிலுள்ள வெடிப்புக்கள் | 221 |
| வீதித் தளப்பரப்பிலுள்ள சேதங்கள் | 56 |
| சரிவடைந்துள்ள வீதிப் பக்கவாட்டுக்கள் | 146 |
| **மொத்தக் குறைபாடுகள்** | **423** |

மேலும், கண்டி – யாழ்ப்பாண வீதியின் அலவதுகொட முதல் பலாபத்வெல வரைக்குமான 17 கிலோமீற்றர் வீதிப் பகுதி சேதமடைந்திருந்த 04 சந்தர்ப்பங்களும் சறிவிற்குற்பட்டிருந்த 28 நேர் மீற்றர்களும் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் புலனாய்வுகளின் போது புலனாய்வு செய்யப்பட்டன.

**3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------

கண்டி – யாழ்ப்பாண வீதியின் கடுகஸ்தோட்டை முதல் அலவதுகொட வரைக்குமான வீதிப் பகுதியினை புனரமைத்து மேம்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்த தாரரின் கோரிக்கைகளை தீர்ப்பதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பில் வட்டியாக ரூபா 3.58 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.